2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே தற்போது 239 தொழில்நுட்பக் கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. அதிலே கிட்டத்தட்ட 80 ஆயிரம் ஒப்பளிக்கப்பட்ட இடங்கள் இருக்கின்றன. இந்த ஆண்டு நடைபெற்ற அந்தப் பொறியியல் கல்லூரி மாணவர்கள் சேர்க்கையிலே, ஒற்றைச் சாளர முறையில் தேர்வு நடைபெற்றதற்குப் பிறகு 11,051 காலி இடங்கள் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளிலே அந்த Management Quota–விலே தற்போது 6 ஆயிரம் இடங்கள் காலியாக இருக்கின்றன. அதுமட்டுமல்ல; தேனி மாவட்டத்திற்கு ஒப்பளிக்கப்பட்ட அந்த மாணவர் சேர்க்கையிலே இருக்கின்ற மொத்த இடங்கள் 420. இதுவரை சென்ற ஆண்டு சேர்க்கையிலே, 420 இடங்களிலே 285 இடங்கள் காலியாக இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலையிலே ஒரு கல்லூரி ஆரம்பிக்கவேண்டும் என்றால், நிலம் நீங்கலாக 10 கோடி ரூபாய் மதிப்பீடு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு இப்போது 5,000 கூடுதலான இடங்களை இன்றைக்கு A.I.C.T.E. ஒதுக்கியிருக்கின்றது. ஆகமொத்தம், 23 ஆயிரம் இடங்கள் இந்த ஆண்டு மட்டும் காலியிடங்களாக தற்போது இருக்கின்ற நிலையிலே, புதியதாக தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கின்ற வினா எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 36, திரு. எஸ். நடராஜன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

36—

பால் கூட்டுறவுச் சங்கம்

***41486—திரு. எஸ். நடராஜன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில் பால் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) நாட்ராம்பள்ளி தொகுதி, கந்திலி ஒன்றியத்தில், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக் கோரி பொது மக்களிடமிருந்து

வேண்டுகோள் மனு எதுவும் பெறப்படாத நிலையில், சங்கம் அமைக்க இயலவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்திலேயே நாட்ராம்பள்ளி சட்டமன்றத் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதியாகும். இந்தத் தொகுதியில் கந்திலி ஊராட்சி ஒன்றியத்தில் *39* சிற்றூராட்சிகள் உள்ளன. இந்தச் சிற்றூராட்சிகளில் உள்ள மக்கள் பீடித் தொழில், ஊதுபத்தி தயார் செய்யும் தொழில் மற்றும் கறவை மாடுகளை வைத்து பால் உற்பத்தி செய்து ஜீவனம் செய்து வருகிறார்கள். இந்த ஒன்றியத்தில், அரசு *5* இடங்களில்தான் பால் உற்பத்தியாளர் சங்கத்தின்மூலம் சுமார் *3* ஆயிரம் லிட்டர் பால் கொள்முதல் செய்து வருகின்றது. மேலும், சுமார் *20* ஆயிரம் லிட்டர் பால் தனியார் நிறுவனங்கள் கொள்முதல் செய்து, அதுவும் குறைந்த விலைக்குக் கொள்முதல் செய்து, பால் உற்பத்தியாளர்களுக்குக் குறிப்பிட்ட நேரத்தில் பணம் பட்டுவாடா செய்யாமல் ஏமாற்றி வருகின்றார்கள். இதைக் கருத்தில்கொண்டு, அரசு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தை அதிகமாகக் கூட்டி, மக்களுக்கு உதவி புரிவார்களா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் *11–30*

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் கிராமப் பகுதியிலே எங்கெங்கெல்லாம் பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அமைக்க கோரிக்கை வைக்கப்படுகிறதோ, அதை உடனடியாக ஏற்றுக்கொண்டு சங்கங்கள் அமைத்திட வேண்டும் என்கிற உத்தரவை எங்களுக்கு இட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, கடந்த காலங்களில் சுமார் *1,017* கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றிலே குறிப்பாக *345* மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு, அவற்றிலே உற்பத்தி செய்யப்படுகிற பாலைக் கொள்முதல் செய்வதிலே, தடையில்லாமல் செயல்படுத்தப்படுகிறது. அதுபோல, நம்முடைய உறுப்பினர் அவர்கள் கோரியபடி அந்தப் பகுதிகளிலிருந்து பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க பால் உற்பத்தியாளர்களிடத்திலிருந்து கோரிக்கை வரப்பெற்றால் நிச்சயமாக அம்மா அவர்களுடைய அரசு சங்கங்களைப் பதிவு செய்வதோடு, அவர்கள் கொடுக்கிற அவ்வளவு பாலையும் கொள்முதல் செய்யும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

2005 செப்டம்பர் 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். நடராஜன்.

திரு. எஸ். நடராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் அக்ரஹாரம் ஊராட்சியில் தென்றல் நகர், மள்ளப்பள்ளி ஊராட்சியில் டோல்கேட், கொத்தனப்பள்ளி என்ற இடங்களில் B சென்டர் என்று உருவாக்கி பால் கொள்முதல் செய்யப்பட்டு வந்தது. பால் உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்த சென்டரில் இப்போது பால் வாங்குவதை நிறுத்தி வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்த சென்டர் தொடர்ந்து பால் கொள்முதல் செய்ய ஏற்பாடு செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பகுதியைக் குறிப்பிட்டு தகவல் தெரிவிக்கப்பட்டால் நிச்சயமாக அந்தப் பகுதியில் மட்டுமல்ல, மனுக்கள் மூலமாக, எந்தெந்த இடங்களிலிருந்து சங்கங்கள் அமைக்க கோரிக்கை வைக்கப்படுகிறதோ, நிச்சயமாக அதை அம்மா அவர்களுடைய அரசு நிறைவேற்றித் தரும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 37, திரு. மு. கார்த்தி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

37—

ஏரிகளை ஆழப்படுத்துதல்

* **69639—திரு. மு. கார்த்தி:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் 2-வது தொகுதி, கன்னங்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை ஆழப்படுத்தி மீன்கள் வளர்க்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன், மீன்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். (ஆ) ஊராட்சி ஒன்றியத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கன்னங்குறிச்சி மற்றும் பள்ளப்பட்டி ஏரிகளை அவ்வூராட்சி ஒன்றியம் தூர்வாரி ஆழப்படுத்திய